மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/1979) திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

[பிற்பகல் 1.20]

(ஊ) கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் மு. அம்பிகாபதி, கு. ரமணி, ஆர். கிருஷ்ணன், ரா. வெங்கிடு சாமி என்கிற வெங்கிடு ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களது தீர்மானம் திரும்பப் பெற்றதாக கருதப் பெறுகின்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 5/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

* திரு. க. மருதாசலம் : சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகராட்சி மன்றத்தின் தனி அதிகாரி நியமனத்தின் காலக்கெடுவை நீட்டிக்கும் சட்டத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கோயம்புத்தூர் நகராட்சி மன்றத்தில் இருக்கிற தனி அதிகாரி அவர்களின் காலத்தை நீடிக்கின்ற அதே நேரத்தில், அங்கே ஒரு சில வேலைகள் நடைபெறாமல் இருந்தாலும்கூட நம்முடைய ஆட்சி வந்தபின்னாலே ஆலோசனைக் குழு ஒன்று நியமித்து அந்தக் குழுவை நியமித்ததற்குப் பிறகு அங்கே பல்வேறு வேலைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்ற உண்மையை இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் அந்த ஆலோசனைக் குழுவிற்கு ஒரு சில அதிகாரிகள் இல்லாமல் இருப்பதும் இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கிறேன். மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அந்த நகராட்சி செயல்படுகின்றபோது அப்பாயின்ட்மென்ட் கமிட்டி இருக்கும். ஆனால் அந்தக் கமிட்டியில் இன்றைக்கு ஆலோசனைக்குழுவில் இருக்கின்ற

*1979, பிப்ரவரி 15 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு, சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1979 மார்ச் 14] [திரு. க. மருதாசலம்]

யாரும் உறுப்பினர்களாக இல்லை. அந்த நகராட்சி அதிகாரிகள் தான் அதில் செயல்படுகின்றார்கள். அந்த அப்பாயின்ட்மென்ட் கமிட்டியில் ஆலோசனைக்குழுவில் இருக்கின்ற இரண்டொருவரை நியமிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் நகராட்சிதேர்தல்களையும், ஊராட்சித் தேர்தல்களையும், நடத்துவதற்கு இந்த அரசு பயப்படுகிறது என்று சொன்னால், கேரள மாநிலத்தில்கூட தேர்தல் 10 ஆண்டு களுக்கு மேல் நடைபெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; நகராட்சி மசோதா முடிந்து விட்டது. இப்போது கோயம்புத்தூர் நகராட்சி மன்றத்தைப் பற்றி மட்டும் சொல்லிவிட்டு முடியுங்கள்.

திரு. க. மருதாசலம் ; கோவை மாநகராட்சி மன்றத்திலே தனி அதிகாரியின் பதவியை அதிக நாள் நீட்டிக்காமல், கால தாமதம் இல்லாமல் தேர்தல் நடத்தவேண்டும் என்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகராட்சி தனி அலுவலர் நியமனத்தை இன்னும் 6 மாதகாலம் நீட்டிக்க வேண்டும் என்று கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டமுன் வடிவை எதிர்த்து ஒரு சில மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்து இருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் தண்டபாணி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திருத்தங்கள் முன்மொழியப்படவில்லை. ஆகவே, அதைப்பற்றிப் பேசவேண்டாம்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : இங்கே கொண்டு வரப் பட்டுள்ள மசோதாவை முழுமனதாக ஆதரித்து ஒரு சில கருத்துக் களைச் சொல்கிறேன். கோவை மாநகரத்தை ஒட்டிய பகுதி களான பெருந்துரை, சென்னிமலை போன்ற சிறிய நகரங்களை யும் நகராட்சியாக மாற்றவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது என்று அறிகிறேன். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், பெருந்துறையில் இருக்கும் டி. பி. சானடோரியம், முனிசி பாலிடியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, அந்த முழுகிக்கொண்டு இருக்கும் ஆஸ்பிடலை காப்பாற்றமுடியும் என்று தெரிவித்து, அதை வற்புறுத்தி, இந்த சட்டமுன்வடிவை ஆதரிக்கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் நகராட்சி மாநகராட்சியாக்கப்பட்டு, அதற்கு தேர்தல் நடத்தவேண்டும் என்று அரசு கருதுகிறது. அந்த வகையில் அந்த நகர மன்றத்திற்கு ஏற்கனவே உள்ள நகரப்பகுதி களைத் தவிர பிற சுற்றுப்புற பகுதிகளும் சேர்க்கப்பட்டு, அது மாநகராட்சியின் தகுதியைப் பெற்று தேர்தல் நடத்தவேண்டும் என்ற முறையில் குடியரசுத் தலைவரின் கையெழுத்திற்காக அனுப்பப்பட இருக்கிறது, ஆகவே, கோவை நகராட்சிக்கு மாநகராட்சி என்ற சிறப்போடு தேர்தல் நடத்த அரசு ஈடுபட்டு இருக்கிறது என்று தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் தண்ட பாணி அவர்கள் தெரிவித்த கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—

''1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 5/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன் வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு-2

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : பிரிவு 2, இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: துணைத்தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட சட்டத்திருத்தத்தை முன்மொழிகிறேன் :

'In clause 2, for the words, ''three years and nine months'', substitute the words ''four years and three months.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு-2 திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு-3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு-1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1979) திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(எ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : துணைத் தலைவரவர்களே, இந்த 'ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' என்பதில் இரண்டாவது காலத்திலே "As soon as delimitation work is completed, the draft electoral rolls will have to be published for receipt of objections and suggestions and after their disposal, the rolls will have to be finally published It will take more than six months to complete all these items of work" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வேலைகள் முடிவடைய 6 மாத காலத்திற்கு மேலாகும் என்று சொல்லப் பட்டிருப்பதால் 6 மாத காலத்திற்குள்ளாக நீங்கள் தேர்தலை நடத்துவீர்களா என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையில் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேனாம்பேட்டை பகுதியில் வீட்டுமனை ஒதுக்கப்பட்டு, அதை இன்ஸ்டால்மென்ட் பேசில் தந்திருக் கிறார்கள். 12 வருஷத்திற்கு மேற்பட்டு பணத்தைக் கட்டி யிருந்தாலும் அவர்களுக்கு அந்த இடம் இன்னும் சொந்தமாக்கப் படவில்லை என்ற குறையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்லம் ஏரியா என்று சொல்லக்கூடிய இடங் களில் குடிதண்ணீர் வசதி இல்லை; லைட் வசதி இல்லை; சானிட்டரி பிராப்ளம் எல்லாம் இருக்கிறது என்று சொல் கிறார்கள். அதை எல்லாம் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

@ 1979, பிப்ரவரி 15 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.